பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 19 | திங்கட்கிழமை 03.08.2020 | கதிர் 138

## ஐ.தே.க. பிரதித் தலைவர் தெரிவை பிற்போடுங்கள்

### ரணிலுக்கு சஜித் கடிதம்

கொழும்பு, ஓக. 03

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் தெரிவை சில நாட்களுக்குப் பிற்போடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, 2

# புதனன்று அச்சமின்றி வாக்களிக்க வாருங்கள் முகக்கவசம், ஒரு மீற்றர் இடைவெளி கட்டாயம்

## தேர்தல் ஆணையாளர் விசேட அறிவிப்பு

கொழும்பு, ஓக. 03

வாக்காளர்கள் எதிர்வரும் புதன்கிழமை எவ்வித அச்சமும் இன்றி வாக்களிக்க வர வேண்டும். முகக்கவசம், ஒரு மீற்றர் இடைவெளியைக் கட்டாயம் பேணி வாக்குச் சாவடிகளில் சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

- இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில் 2

# சர்வதேச அமைப்புகள் அரசை மிரட்ட முடியாது

## பரப்புரைக் கூட்டத்தில் மஹிந்தர் சண்டித்தனம்

கொழும்பு, ஓக. 04

ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் இலங்கையின் இறையாண்மையை மீறி அரசை மிரட்ட முடியாது. அந்த மிரட்டலுக்கு நாம் அடிபணியவும் தயாரில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## ஹெரோயின் பூனை மாயம்

கொழும்பு, ஓக. 03

கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்குள் ஹெரோயின் கடத்திச் சென்றபோது, மடக்கிப்பிடிக்கப்பட்ட பூனை, தப்பிச் சென்றுள்ளது. 2

## தேர்தல் சட்டதிட்டங்களை மதிக்காத வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓக. 03

எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த வேட்பாளரும் தேர்தல் சட்டதிட்டங்களை மதிப்பதில்லை என்று தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார். 2







இயற்கை முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட காய்ப்பதற்கு தயாரக உள்ள மரக்கறிக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

- சரியான அளவில் இயற்கைப் பசளைகள் இடப்பட்டு வளர் பைகளில் (Grow Bag)பராமரிக்கப்பட்டவை.
- வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம் மற்றும் குறைந்தளவு இடவசதி உள்ளவர்களுக்கு பொருத்தமானது.

உங்கள் தோட்டத்தை நாங்களே தருகிறோம்....
நீர் ஊற்றிப் பரமரித்தால் போதுமானது .....



# திறமையான குழுவை சபைக்கு அனுப்புங்கள்

## பிரதமர் மஹிந்த கோரிக்கை



நல்லாட்சியின் நான்கரை வருடங்கள் நாட்டின் இருண்ட யுகமாகும். எனவே, நாட்டின் வளங்களைப் பாதுகாத்து கட்டியெழுப்பக்கூடிய நம்பிக்கையான குழுவினரை நாடாளுமன்றத்துக்கு இம்முறை தெரிவுசெய்யுங்கள்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

அம்பாந்தோட்டை பீச் பார்க்கில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் இறுதிநாள் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் எமது ஆட்சிக் காலத்தின்போது இந்த மாவட்டத்தில் துறைமுகம், விமான நிலையம், சர்வதேச விளையாட்டரங்கு மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் போன்றவற்றை நிர்மாணித்தது எதிர்கால சந்ததியினரின் நலன் கருதியே ஆகும். அவர்களுக்கே இவை அனைத்தும் சொந்தமாகும்.

எதிர்காலத்தில் எமது நாட்டில் பிறக்கப்போகும் குழந்தைகளுக்குச் சொந்தமான சொத்துக்களை ஐந்து வருடங்களுக்கு ஆட்சியேற்கும் அரசுக்கு ஒரு போதும் விற்பனை செய்ய எந்த உரிமையும் இல்லை. இதை நான் உங்களுக்கு மிகவும் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அவ்வாறு செய்வதைத் தேசத்துரோகமாகவே கருதுகின்றேன்.

2005 எமது ஆட்சியில் போரை நிறைவு செய்து அபிவிருத்தியை ஆரம்பித்தோம். அதன் பிரதிபலனையே தற்போது அனுபவிக்கிறீர்கள். இவை உங்களுக்கே சொந்தமானது. இங்கிருந்த சஜித் பிரேமதாஸ இவற்றை விற்பனை செய்வதை ஆமோதித்து விட்டு உங்களை கைவிட்டு கொழும்புக்குச் சென்றுள்ளார். இம்முறை தேர்தலில் ஜனாதிபதியைப் பலப்படுத்தக் கூடிய வெற்றியை வழங்க வேண்டும். நான் எங்கு போட்டியிட்டாலும் உங்களுடனேயே இருக்கின்றேன் - என்றார்.

# இன்றும் நாளையும் அமைதிக்காலங்கள்

## பரப்புரைக்கு தடை விதிப்பு மீறினால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக. 03

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவுற்றுள்ள நிலையில் இன்றும் நாளையும் அமைதிக் காலங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அமைதிக்காலத்தில் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இக்காலத்தில் வேட்பாளர்கள் பரப்புரை நடவடிக்கைகளைத் தவிர்த்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, அனைத்து வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைதிக்காலத்தில் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராகத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ள மஹிந்த தேசப்பிரிய, அமைதிக்காலத்தில் பரப்புரைக் கூட்டங்களை நடத்துதல், கிராமங்களிலும் வீடுகளிலும் கூட்டங்களை நடத்துதல், வீடு வீடாகச் சென்று வாக்குகளைக் கேட்டல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் என்பவற்றுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவித்துள்ளார்.



அமைதிக்காலப் பகுதியினுள் அனைத்து அரசியல் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் இவற்றைத் தவிர்த்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

### புதனன்று அச்சமின்றி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குச் சாவடிகளில் கொரோனா வைரஸ் பரவலுக்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. வாக்குச் சாவடிகளுக்குள் தொற்றுடன் வரவோ அல்லது வைரஸ் தொற்றுடன் வெளியேறவோ எவ்வித வாய்ப்புகளும் இல்லை.

வாக்குச் சாவடிகளுக்கு வரும் அனைவரும் கட்டாயம் முகக்கவசங்களை அணிந்திருக்க வேண்டும். கைகளையும் கழுவிக்கொண்டு வரவேண்டும். வாக்குச் சாவடியில் முதலாவதாக வுள்ள அதிகாரிக்கு முகக்கவசங்களை கீழிறக்கிவாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த முகத்தை காட்ட வேண்டும். பின்னர் மீண்டும் கைகளைக் கழுவ வேண்டும்.

அதன் பின்னர் கை விரலை மடித்து மை பூசிக்கொள்ள வேண்டும். ஒரு முறை மாத்திரமே மை பூசும் பேனை பயன்படுத்தப்படுத்தப்படும் என்பதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வைரஸ் பரவலுக்கு வாய்ப்பு இல்லை. அதனால் வாக்காளர்களை அச்சமின்றி வாக்குச் சாவடிகளுக்கு வருமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

முடிந்தால் கறுப்பு அல்லது நீலப் பேனையைக் கொண்டுவாருங்கள். இல்லாவிட்டால் நாம் தொற்று நீக்கப்படும் பேனைகளை வழங்குவோம். வாக்களிப்பதற்கான ஆவணத்தைக் கட்டாயம் அனைவரும் கொண்டுவர வேண்டும் - என்றார்.

### ஐ.தே.க. பிரதித் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை மூன்றாவது தரப்பின் ஊடாகவே விடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்த, அதற்கு ஆதரவளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள் அடங்கலாக 150 இற்கும் மேற்பட்டோர், ஐ.தே.கவிலிருந்து விலக்கப்பட்டனர்.

எனினும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கவின் பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச அமைப்புகள் ..................

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மீண்டும் புலிப்பயங்கரவாதம்தலைதூக்கஇடமளியோம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்று ஒரு தீவிரவாதத் தாக்குதல் இங்கு மீண்டும் இடம்பெறச் சந்தர்ப்பம் வழங்கமாட்டோம். கடந்த நல்லாட்சிக் காலத்தில் இடம்பெற்றதுபோல் சர்வதேச அமைப்புகள் எமது நாட்டின் உள்விவ காரங்களில் மீண்டும் தலையிட அனுமதியோம்.

புதிய நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதே எமது இலக்கு. அதற்காகவே மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசு அமைக்க மக்களின் ஆணையைக் கோரி நிற்கின்றோம்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக பிரதான எதிர்க்கட்சி இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்டுப் போட்டியிடுகின்றது. உங்கள் மதிப்பு மிக்க வாக்குகளை அத்தகைய கட்சிகளுக்கு வழங்கி வீணாக்கக்கூடாது.

நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதைவிட 'சிறிகொத்தா' தலைமையகத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றப் போராடும் தனிநபர்களுக்காக உங்கள் வாக்குகளை வழங்காதீர்கள்.

ஒரு சிறந்த எதிர்காலத்துக்காக நாட்டை அபிவிருத்தி செய்வதற்குத் தயாராக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 'தாமரை மொட்டு' சின்னத்துக்கே உங்கள் வாக்குகளைத் தவறாது வழங்குங்கள் - என்றார்.

### ஹெரோயின் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்ட பூனையை மேலதிக விசாரணைக்காக பொறளை பொலிஸாரிடம் ஒப்படைக்கவிருந்தபோதும், பொலிஸார் அதை பொறுப்பேற்கத் தாமதமாகியிருந்த நிலையில், அது தப்பியோடியுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனரத்ன இன்று இதனைத் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியிருப்பதாகவும், கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி பேஸ்லைன் வீதிப்பகுதியில் உள்ள மகஸின் சிறைச்சாலை நுழைவாயிலுக்கு அருகில் பூனை பிடிக்கப்பட்டது. அதன் கழுத்தில் 1.7 கிராம் ஹெரோயின், சிம் கார்ட், மெமரி கார்ட் என்பன பொதி செய்யப்பட்டு கட்டப்பட்டிருந்தன.

### தேர்தல் சட்ட........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, பதுளை தேர்தல் அலுவலகத்துக்குச்சென்றபோதே, அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பதுளை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இந்திக அத்துருசிங்க உள்ளிட்டவர்கள், பதுளை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தாலும் இந்தப் பிரதேசத்தில் போட்டியிடும்எந்தவொருவேட்பாளரும் தேர்தல் சட்டதிட்டங்களைப் பின்பற்றி, தேர்தல்நடவடிக்கைகளைமுன்னெடுக்கவில்லை.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வேட்பாளர்கள் நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால், அவருக்கு வழங்கப்படும் தண்டனைகளுக்குமேலதிகமாக7வருடங்களுக்கு அரசி யல் தடை விதிக்க வேண்டும் - என் றார்.

# அச்சமின்றி வாக்களியுங்கள்!

## யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஓக. 04.

வாக்களிப்பின்போது யாருக்கு வாக்களிக்கப்பட்டது என்பதை ஒருபோதும் கண்டறிந்துகொள்ளவே முடியாது. எனவே வாக்காளர்கள் எந்த அச்சமும் இன்றி வாக்களிக்கலாம் என யாழ். மாவட்ட தேர்தல் ஆணைக்குழுவின் உதவி ஆணையாளரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான இ.கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என நாம் கண்டறிவோம். அதில் எமக்கு வாக்களிக்கவில்லை என்றால் எந்தத் தேவையையும் பெற்றுத்தர மாட்டோம் என அரசியல்வாதிகள் தரப்பில் தொலைபேசிகள் வாயிலாகவும், நேரிலும் தெரிவிப்பதாகக் கூறப்படுகின்றது. அது முழுக்க முழுக்கத் தவறான கூற்று . ஏனெனில் தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவே அன்றி அரசியல்வாதிகள் கிடையாது. இங்கே அளிக்கப்படும் எந்தவொரு வாக்கும் எவருடையது என்பதனை எந்தவொரு அதிகாரியினாலோ அல்லது எந்த தலைவர்களினாலோ கண்டுகொள்ளவே முடியாது.

எனவே மக்கள் அனைவரும் பயம் இன்றி வாக்களிக்க முடியும். அத்தோடு அனைவரும் வாக்களிக்க வேண்டும். முடிந்தவரை நேரத்தோடு வாக்களிக்க வேண்டும் என்பதோடு சுகாதார நடைமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. இவற்றினையும் தாண்டி வாக்காளர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தால் உடன் முறையிடலாம் அந்த முனைப்பாடுகள் தொடர்பிலும் இரகசியம் காக்கப்படும் தன்மை உள்ளது – என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தவறாது வாக்களிப்போம்!

உலகம் கொரோனாப் பேரிடரில் மூழ்கிக் கிடக்கின்றது.

இலங்கையின் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்ட நேரத்தில் கொரோனாப் பேரிடரும் வந்து சூழ்ந்தது.

இதனால் பொதுத் தேர்தல் திகதிகள் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டன.

வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் நாடு சுமார் இரண்டு மாதங்கள் முடக்கப்பட்டுக் கிடந்தது.

இந்தப் பின்புலத்தில் இலங்கையில் தேர்தல்கள் இனிக் கிட்டிய காலத்தில் சாத்தியமாகுமா என்ற சந்தேகம் கூட ஏற்பட்டது.

நாட்டின் நாடாளுமன்றம் கூடி ஐந்து மாதங்களாகி விட்டன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, சட்டமாக்கற் சபை செயலிழந்து ஐந்து மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பொதுத் தேர்தலை நடத்தக் கூடிய சூழல் சாதகமாகி வருகின்றது.

கொரோனாப் பேரிடருக்கு மத்தியில் இந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போகுமோ என்றே பலரும் அச்சப்பட்டனர்.

கொரோனாத் தொற்று சமூகப் பரவலாகித் தேர்தலை நடத்த முடியாத சூழலை ஏற்படுத்தி விடுமோ என்று பலரும் சந்தேகித்தனர்.

தேர்தல் நடத்துதல், அதற்கான பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விடுதல், வாக்களிப்புப் போன்றவையே கொரோனாத் தொற்றை சமூகப் பரவலாக்கக் காரணமாக்கி விடலாம் எனப் பல தரப்பினரும் அச்சப்படுகின்றனர்.

வெலிசறைக் கடற்படை முகாமிலும், கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திலும் கட்டுப்பாடின்றித் தொற்றிய கொரோனா பெரும் சமூகப் பரம்பலாக விஸ்வரூபம் எடுத்து பொதுத் தேர்தலையும் பாதிக்கும் ஆபத்து நேர்ந்து விடலாம் எனப் பலரும் பயந்தனர்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவேயில்லை.

வெலிசறைக் கடற்படை முகாமுக்குள் பரவிய கொரோனாத் தொற்று அதற்கு வெளியில் பரவிய போதும் அதிகாரிகளினதும், சுகாதாரத் துறையினரதும், பாதுகாப்புத் தரப்பினரதும் துணிச்சலான, விரைந்த, ஒன்றிணைந்து திட்டமிட்டு முன்னெடுத்த நடவடிக்கைகளினால் அது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அதே போன்றே கந்தக்காடு புனர்வாழ்வுத் தடுப்பு முகாமின் பரவலையும் இரும்புக் கரம் கொண்டு இறுக்கமாக அடக்கியது இலங்கையின் கோட்டாபய ஆட்சி நிர்வாகம்.

ஏனைய நாடுகளின் கொரோனாத் தொற்றுப் பரவலுடன் ஒப்பிடுகையில் இலங்கை எத்தனையோ படி மேல் எனலாம்.

அந்த நிலைமை காரணமாகவே இலங்கையில் பொதுத் தேர்தல் நடத்தக் கூடிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது என்று துணிந்து கூற முடியும்.

நாட்டின் ஜனாதிபதி, சுகாதார அமைச்சர், சுகாதார அதிகாரிகள் மற்றும் அது தொடர்பான சுகாதாரப் பணியாளர்கள், மருத்துவத் தொழிலாளர்கள், பொது நல சுகாதாரப் பரிசோதகர்கள், டாக்டர்கள் மற்றும் பொலிஸ் துறையினர், முப்படையினர் எனப் பலதரப்பட்ட ஆளணியினரதும் தளராத ஓர்மத்துடன் கூடிய பங்குபணியாலேயே இந்த விடுதலைச் சூழ்நிலை சாத்தியமாயிற்று.

அதனால்தான் நாளை மறுதினம் பொதுத் தேர்தலை நடத்தக் கூடிய களச் சூழ் நிலையைப் பேண முடிந்திருக்கின்றது.

தேர்தல் வாக்களிப்புக் காரணமாகத் தொற்றுப் பரவியது, தொற்று ஏற்பட்டது என்ற சந்தேகமே வராத முறையில் பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும், எச்சரிக்கை நடவடிக்கைகளையும், தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

வாக்களிப்பு நிலையத்துக்கு வரும் ஒவ்வொருவரும் ஒன்றுக்கு மூன்று தடவைகள் கைகளைக் கழுவித் துப்புரவு செய்யும் நடவடிக்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல் போன்ற முக்கிய விடயங்கள் கட்டாயமாக்கப்பட்டு அவை செயலில் உறுதி செய்யப்படுவதை தேர்தல் ஆணையம் விசேடமாகக் கவனித்துள்ளது.

இந்த முன்னெச்சரிக்கைகள் காரணமாக வாக்களிப்பினால் தொற்று ஏற்படும் என்ற ஆபத்து 99.9 வீதம் தவிர்க்கப்பட்டிருக்கின்றது என மருத்துவ வட்டாரங்கள் உறுதி செய்திருக்கின்றன.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் தவறாது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதன் மூலம் இந்தக் கூட்டு முயற்சி தொடர்பில் எமது ஒத்துழைப்பை கொடுப்பது இலங்கைத் தீவிம் ஒவ்வொரு பிரஜையினதும் வரலாற்றுக் கடமையாகும்.

# பொருளாதார அபிவிருத்திக்கு ஐ.தே.கவுக்கு வாக்களிக்கவும்!

## மக்கள் சந்திப்பில் ரணில் வேண்டுகோள்

கொழும்பு, ஓக.03

பொருளாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வாக்களிக்க வேண்டிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி என அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொரட்டுவையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

தற்போது நாடு அடகு வைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி எல்லாம் நிறுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்று கூட வாங்க முடியாத நிலை ஏற்படும். இலங்கையில் கையடக்கத் தொலைபேசி தயாரிக்க முடியுமா? ஹலோ சார் என்றுதான் கூற வேண்டி வரும்.

தலைக்கவசத்துக்குப் பதிலாக தகரடின்னைதான் தலையில் மாட்டிக் கொள்ள வேண்டும். நாம் அந்த இடத்துக்குச் செல்வது நல்லதல்ல.

இந்த நாட்டைக் காப்பாற்றக்கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே. எமது தரப்பினர் காலை இழுத்து விட்டாலும் நாங்கள் ஓடுவோம்.

வீட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள்.

இளைஞர்கள் தங்கள் எதிர்காலம் தொடர்பாக சிந்தித்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் முடிவை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களை விட இன்று இளைஞர்கள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இலங்கை ஏன் வளர்ச்சியடையவில்லை, அரசியல்வாதிகள் ஏன் அதிக நன்மைக்காக ஒன்றிணைக்க முடியாது என்பது போன்ற பல கேள்விகள் மக்களின் மனதில் உள்ளன. இருப்பினும் இப்போது நாடு கொரோனா வைரஸ் தொற்றுநோயின் அச்சுறுத்தலை எதிர்கொள்வது மட்டுமல்லாமல் பொருளாதார சரிவின் விளிம்பிலும் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பல இளைஞர்கள் வாக்களித்தனர், இருப்பினும் அவர்களின் நம்பிக்கை சிதைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்க சரியான முடிவை எடுக்க வேண்டும்.

இலங்கை முன்னணி நாடாகக் கட்டியெழுப்புவதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அவசியமாகும் – என்றார்.

# தேர்தல் முன்னாயத்த நடவடிக்கை; மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்த்தி







(மட்டக்களப்பு நிருபர்)

பொதுத் தேர்தல் 2020 இற்கான வாக்களிப்பு நாளை மறுதினம் நடைபெறவிருக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமுகமான தேர்தலினை நடாத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமாகிய திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் இன்று மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் நடாத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக மட்டக்களப்பு பிரதி பொலிஸ்மா அதிபர் லக்ஸ்ரீ விஜேசேன கருத்து தெரிவிக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுத்தேர்தலினை சுமுகமாக நடத்துவதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

வாக்களிப்பு இடம்பெறவுள்ள 428 வாக்குச் சாவடிகளுக்குமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 57 நடமாடும் பொலிஸ் பிரிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக விசேடமாக இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டு பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இதற்கான போக்குவரத்து மாற்றுப் பாதைகள் ஏற்பாடு செய்யப்பட்டு வீதித்தடை ஒழுங்குகள் மற்றும் ஒளி விளக்கு சமிக்ஞைகள் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கான மின்விளக்கு ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.


அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் வாக்களிப்பிற்காக வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்வதற்கும், வாக்களிப்பின் பின்னர் வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணும் நிலையத்திற்கு கொண்டுவருவதற்குமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மற்றும் தேர்தலுக்குப் பின்னர் வன்செயல்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள் மற்றும் பிரமுகர்களின் பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக வீதித்தடைகள், நடமாடும் பொலிஸ் பிரிவுகள், மோட்டார் சைக்கிள் நடமாடும் பிரிவுகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதுதவிர தேர்தல் சட்டவிதிகளுக்கமைவாக சட்டவிரோத கட்டவுட்கள், பதாதைகள், சுவரொட்டிகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளும், அதற்கான பணியாள்களும் தயார்நிலையில் உள்ளதுடன் வாக்களிப்பு நிலையத்திற்கு அண்மித்த 500 மீற்றர் சுற்றுப்புறத்தில் இவ்வாறான சுவரொட்டிகள் மற்றும் பதாதைகள் அகற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் லக்ஸ்ரீ விஜேசேன கருத்து தெரிவித்தார்.

இவ்விசேட கூட்டத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர். சசீலன், மட்டக்களப்புக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெண்டிஸ், விசேட பாதுகாப்பு கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான சாமிக பிரேமஸ்ரீ, ஏ.எம்.எம். நவாஸ் மற்றும் தேர்தல் கடமைகளுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# உள்துறை அமைச்சர் அமித் ஷா, கர்நாடக முதல்வர் தமிழக ஆளுநர் எல்லோரையும் பீடித்தது கொரோனா








பெங்களூரு, ஓக.03

உள்துறை அமைச்சர் அமித் ஷாவை தொடர்ந்து, கர்நாடக முதல்வரும், பா.ஜ., மூத்த தலைவருமான எடியூரப்பாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சரும், பா.ஜ., மூத்த தலைவருமான அமித் ஷாவுக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவர் டில்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே போல், தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோஹித்துக்கும், உத்தர பிரதேச மாநில, பா.ஜ., தலைவர் ஸ்வதேந்திர சிங்கிற்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், கர்நாடக முதல்வரும், பா.ஜ., மூத்த தலைவருமான எடியூரப்பாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் உறுதி செய்தார்.

இதுகுறித்து அவர் டுவிட்டரில் பதிவிட்டவை வருமாறு:-

எனக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. டாக்டர்கள் பரிந்துரையின் பேரில், நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். சமீப காலத்தில் என்னை சந்தித்தவர்கள், என்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்திக் கொண்டு, கவனமாக இருங்கள். - இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## கார்த்தி சிதம்பரம் எம்.பிக்கு கொரோனா தொற்று உறுதி




சிவகங்கை,ஓக.03

தமிழகத்தில் வேகமாக பரவும் கொரோனா வைரஸ்தொற்றுக்குக்களப்பணியில்ஈடுபட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளும் தப்பவில்லை. எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் அடுத்தடுத்து கொரோனா தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலையில், சிவகங்கை மக்களவை தொகுதிஎம்.பிகார்த்திசிதம்பரத்துக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. லேசான அறிகுறிகள் மட்டுமே இருப்பதால் மருத்துவர் ஆலோசனைப்படி தாம் தம்மை வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார் எனக் கார்த்தி சிதம்பரம் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

## வங்கக்கடலில் உருவாகின்றது புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி



வடக்கு வங்கக்கடல் பகுதியில் நாளை புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்திய வானிலை மையம் இது தொடர்பில் கூறியிருப்பதாவது:-

வடக்கு வங்கக்கடல் பகுதியில் நாளை புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்ததாழ்வுபகுதி உருவாக உள்ளதால்தென் மேற்கு பருவமழை மேலும் வலுவடையும். 5 நாள் கனமழை பெய்யும் என்பதால் கேரளா, கர்நாடகாவிற்கு ஆரஞ்சு நிற எச்சரிக்கையும், குஜராத், மகாராஷ்டிராவுக்கு சிவப்பு நிற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு மத்திய மேற்கு, அரபிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நலமடைந்தார் அமிதாப்

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த பொலிவுட் திரையுலகின் பிரபல நடிகரான அமிதாப் பச்சன் நோய்த்தொற்று பாதிப்பிலிருந்து குணமடைந்ததை அடுத்து நேற்று வீடு திரும்பினார்.

கடந்த மாதம் அமிதாப் பச்சன், அவரது மகன் அபிகே் பச்சன், மருமகள் ஐஸ்வர்யா ராய் உள்ளிட்டோருக்கு தங்களுக்கு கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டதை ட்விட்டர் பக்கம் வாயிலாக தெரிவித்திருந்தனர்.

## காச நோய்க்கான தடுப்பூசி கொரோனாத் தடுப்புக்கும்?



புதுடெல்லி,ஓக.03

காசநோயைத் தடுப்பதற்காக போடப்படும் பேசிலஸ் கால்மெட்-குய்ரின் (பி.சி.ஜி) மூலம் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தலாம் என ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது.

குழந்தைப் பருவ காசநோயைத் தடுப்பதற்காக பேசிலஸ் கால்மெட் - குய்ரின் (பி.சி.ஜி) தடுப்பூசி கட்டாயமாக போடப்பட்ட நாடுகளில் கொரோனா பாதிப்புகள் மற்றும் இறப்புகள் குறைவாகப் பதிவாகி உள்ளன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வின்படி கொரோனா வைரஸைக் கையாள்வதில் இந்தியா போன்ற சில நாடுகள் சில பெரிய நாடுகளை விட சிறப்பாக செயல்படுகின்றன என்பதை காட்டுகிறது.


பி.சி.ஜி தடுப்பூசிகொரோனா தொற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது.130 க்கும் மேற்பட்ட நாடுகளின் தொற்று மற்றும் இறப்பு புள்ளிவிவரங்களை மதிப்பாய்வு செய்த ஆய்வு முதன்முறையாக 2000 முதல் பி.சி.ஜி நோய்த் தடுப்பூசி போடப்பாடாத நாடுகள் இறப்புகளில் அதிவேக அதிகரிப்பை பதிவு செய்துள்ளன.

பகுப்பாய்வு சராசரி வயது, தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி, மக்கள் தொகை அடர்த்தி, மக்கள் தொகை அளவு, நிகர இடம்பெயர்வு வீதம் மற்றும் பல்வேறு கலாச்சார பரிமாணங்கள் (எ.கா., தனிமனிதவாதம்) ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய பின்னர் வழக்குகள் மற்றும் இறப்புகளின் வளர்ச்சி விகிதம் குறித்த கட்டாய பி.சி.ஜி கொள்கைகளின் குறிப்பிடத்தக்க விளைவை வெளிப்படுத்தியது.

"கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் கட்டாய பி.சி.ஜி தடுப்பூசி பயனுள்ளதாக இருக்கும் என்று எங்கள் பகுப்பாய்வு தெரிவிக்கிறது, என்று மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# நிலவின் மேற்பரப்பில் 'சந்திராயன் - 2' இன் ரோவர் நாசாவின் படங்களை ஆராய்ந்ததில் கண்டுபிடிப்பு

## சென்னை பொறியியலாளர் சாதனை




சென்னை, ஓக.03

நிலவின் மேல்பரப்பில் சந்திரயான் - 2 ரோவர் கிடப்பதாக சென்னையை சேர்ந்த பொறியியலாளர் கண்டுபிடித்து இஸ்ரோ மற்றும் நாசாவுக்குத் தகவல் தெரிவித்து உள்ளார்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) உலகிலேயே முதன் முறையாக நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய முடிவு செய்தது. இதற்காக சந்திரயான் - 2 விண்கலத்தை ரூ.978 கோடி செலவில் வடிவமைத்தது. இது ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2ஆவது ஏவுதளத்தில் இருந்து கடந்த ஆண்டு ஜுலை 22 ஆம் திகதி ஜி.எஸ்.எல்.வி. மார்க்.3 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. நிலவில் தரையிறங்கி சோதனை செய்ய சந்திரயான் - 2 விண்கலத்தில் விக்ரம் லாண்டரும் அதில் ரோவர் கருவியும் பொருத்தப்பட்டு இருந்தன.

தொடர்ந்து 48 நாள்கள் பயணம் முடிந்து கடந்த ஆண்டு செப்டம்பர் 7 ஆம் நிலவின் தரையில் இருந்து 2 கிலோ மீற்றர் உயரத்தில் இருந்து தரையிறங்க முயற்சித்த போது வெற்றிகரமாக தரையிறக்கம் செய்ய இயலவில்லை. நிலவின் தென் துருவத்தை தொடுவதற்கு சற்று முன்பு நிலவின் தரையில் இருந்து 2 கிலோ மீட்டரில் சந்திரயான் - 2, லாண்டர் விக்ரமுடன் தொடர்பை இழந்தது.

இந்தநிலையில் நிலவில் விக்ரம் லாண்டரின் நிலை என்ன என்பது குறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் ஆய்வை தொடங்கினார்கள். அமெரிக்காவின் விண்வெளித்துறையான நாசா சில புகைப்படங்களை கடந்த ஆண்டு செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் எடுத்து வெளியிட்டது.

இந்த புகைப்படங்களை ஆய்வு செய்த சென்னையை சேர்ந்த பொறியியலாளர் சண்முக சுப்பிரமணியன் நிலவில் விக்ரம் லாண்டரின் துகள்கள் கிடப்பதை கண்டுபிடித்து இஸ்ரோவுக்கும், நாசாவுக்கும் தகவல் தெரிவித்தார். இதனை ஏற்று அவரை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நாசா பாராட்டியது.

தற்போது கடந்த ஜனவரி மாதம் நிலவில் எடுத்த சில புகைப்படங்களை நாசா கடந்த மே மாதம் வெளியிட்டது. இந்த புகைப்படங்களுடன், கடந்த ஆண்டு வெளியான புகைப்படங்களையும் ஒப்பிட்டு சண்முக சுப்பிரமணியன் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் அடிப்படையில் கண்டுப்பிடிக்கப்பட்ட புதிய தகவல்களை இஸ்ரோவுக்கும், நாசாவுக்கும் இ - மெயில் மூலம் அவர் அனுப்பி உள்ளார்.

அதில், சந்திரயான் - 2 இன் ரோவர் நிலவின் மேற்பரப்பில் அப்படியே இருப்பதாகத் குறிப்பிட்டு உள்ளார். கடினமான தரையிறக்கம் காரணமாக அதன் உதரிபாகங்கள் சிதைந்தமையுடன், விக்ரம் லாண்டரில் இருந்து ரோவர் உருண்டு சில மீட்டர் தூரத்தில் கிடப்பதாகக் கூறி உள்ளார்.

இதனை இஸ்ரோவும், நாசாவும் முறையாக உறுதிப்படுத்த வேண்டும். நிலவின் மேற்பரப்பில் ஒரு வெற்றிகரமான மென்மையான தரையிறக்கம் ஏற்பட்டு இருந்தால் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவுக்குப் பிறகு இந்தியா இந்த சாதனையை அடைந்திருக்கும் என்று சண்முக சுப்பிரமணியன் கூறி உள்ளார்.

# அமெரிக்காவில் 2 சிறிய விமானங்கள் நடுவானில் மோதி விபத்து; 7 பேர் சாவு

அமெரிக்காவில் 2 சிறிய விமானங்கள் நடுவானில் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் பலியாகினர். அலாஸ்கா மாகாணம் ஆன்கரேஜ் (Anchorage ) பகுதியிலுள்ள சோல்டாட்னா (Soldotna) விமான நிலையம் அருகே 2 விமானங்களும் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் ஒரு விமானத்தில் இருந்த அலாஸ்கா மாகாண சட்டப்பேரவை கீழவை உறுப்பினரான (Alaska House of Representatives) குடியரசு கட்சியை சேர்ந்த கேரி க்னோப் (Gary Knopp) பரிதாபமாக உயிரிழந்தார்.

மற்றோர் விமானத்தில் பயணித்த தெற்கு கரோலினாவை சேர்ந்த 4 சுற்றுலா பயணிகள், வழிகாட்டி மற்றும் விமானி ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்பு (National Transportation Safety Board) அமைப்பு, அமெரிக்க பெடரல் விமான போக்குவரத்து நிர்வாகம் (Federal Aviation Administration) ஆகியவை விசாரணை நடத்தி வருகின்றன.



## பெற்றோல் மூலம் கைகளை சுத்தம் செய்ய ஆலோசனை

### பிலிப்பீன்ஸ் அதிபர் கூறுகின்றார்



அல்கஹால் சானிடைசர் (தொற்று நீக்கி) வாங்க முடியாத ஏழை எளியோர்கள், பெட்ரோலைப் பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்யுமாறு பிலிப்பின்ஸ் அதிபர் Rodrigo Duterte மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

ஏற்கனவே ஒரு முறை, அவரின் இந்தக் கருத்து சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இன்று தொலைக் காட்சியில் ஆற்றிய உரையின் போது, சானிடைசர் வாங்க இயலாதவர்கள், பெட்ரோல் பங்குகளுக்குச் சென்று, சில துளி பெட்ரோலால் கைகளை சுத்தம் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

பிலிப்பீன்ஸில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமையால், அதிபர் Rodrigo ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை ஊரடங்கை நீடித்துள்ளார்.

## கொரோனா தடுப்பூசி சோதனைகள் முடிந்து விட்டதாக ரஷ்யா அறிவிப்பு

உலகிலேயே முதன்முறையாக கொரோனா தடுப்பூசிக்கான சோதனைகள் முடிந்து விட்டன என ரஷ்யா அறிவித்திருப்பது, உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில், உலக நாடுகள் அனைத்தும் ஈடுபட்டுள்ளன.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டு, பரிசோதனைகளில் உள்ளன. இந்நிலையில் மொஸ்கோ நகரிலுள்ள நூழிதுழியிளதீழி ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கிய கொரோனா தடுப்பூசியின் சோதனைகள் நிறைவடைந்து விட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சர் மிக்கேல் முராஷ்கோ (Mikhail Murashko), Gamaleya நிறுவன தடுப்பூசியின் மனிதர்கள் மீதான




சோதனை நிறைவடைந்துள்ளதாகவும், பதிவு செய்வதற்கான ஆவண வேலைகள் நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒகஸ்ட் 10 முதல் 12 ஆம் திகதிக்குள் தடுப்பூசி பதிவு செய்யப்பட்டு, ஒக்டோபரில் மருத்துவர்கள், ஆசிரியர்களுக்கு தடுப்பூசியை செலுத்த திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியப் பகுதிகளை உள்ளடக்கி நேபாளத்தில் புதுப்பித்த வரைபடம்

### சர்வதேச அமைப்புக்களுக்கு அனுப்பத் திட்டம்

இந்திய பகுதிகளை உள்ளடக்கி புதுப்பித்துள்ள வரைபடத்தை சர்வதேச அமைப்புக்களுக்கு அனுப்ப நேபாளம் திட்டமிட்டுள்ளது. உத்தராகண்டில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளை உள்ளடக்கி, கடந்த



மே மாதத்தில் நேபாள அரசு புதிய வரைபடத்தை வெளியிட்டது.

இது அடிப்படை ஆதாரமற்றது, இரு நாடுகளுக்கு இடையே நடைபெறும் பேச்சுக்கு முரணானது என இந்தியா தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், புதுப்பிக்கப்பட்ட வரைபடத்தை இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை, கூகுள் மற்றும் சர்வதேச சமூகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என நேபாளம் அறிவித்துள்ளது.

மேலும், வரும் 15 ஆம் திகதிக்குள், இந்த பணிகள் நிறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இருபதாயிரம் அமெரிக்கர்கள் மூன்று வாரங்களில் பலியாவர்

### நோய்க் கட்டுப்பாட்டு மையம் எச்சரிக்கை



அடுத்த 21 நாள்களில் மேலும் இருபதாயிரம் அமெரிக்கர்கள் கொரோனாவுக்கு பலியாவார்கள் என அந்த நாட்டின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இதுவரை ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 447 பேர் வைரஸ் தொற்றால் உயிரழந்துள்ளனர்.

வரும் 22 ஆம் திகதி வாக்கில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 73 ஆயிரம் ஆக அதிகரிக்கும் என அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. அலபாமா, நியூ ஜெர்சி, கென்டகி, வொஷிங்டன் உள்ளிட்ட மாநிலங்களில் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் வாயிலாக அமெரிக்காவில் கொரோனாத் தொற்று வேகமாக பரவும் என எச்சரித்துள்ள பொது சுகாதார நிபுணர்கள், அவர்கள் கூட்டமாக சேர்ந்து நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதன் மூலம் சமூகத்தில் தொற்றைப் பரவச் செய்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## சீனாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உலகம் தயார்!

### அமெ. வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

பூட்டானுக்குச் சொந்தமான பகுதிக்கு உரிமை கொண்டாடுவது, இந்திய எல்லையில் அத்துமீறுவது போன்ற சீனாவின் செயல்கள், உலக நாடுகளை ஆழம் பார்க்கும் செயல் என அமெரிக்கா கூறியுள்ளது.

அண்டை நாடுகள் மீதான அச்சுறுத்தல்களுக்கு உலக நாடுகள் எப்படி எதிர்வினையாற்றுகின்றன என்பதை சீனா அறிந்து கொள்ள முயற்சிப்பதாகவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ கூறியுள்ளார்.

ஆனால் சீனாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உலகம் தயாராக உள்ளது என்பதே தனது உறுதியான நம்பிக்கை என்றும், இதை தீவிரமான பிரச்சினையாக எடுத்துக் கொண்டு மேலும் தயாராக வேண்டும் என்றும் மைக் பாம்பியோ கூறியுள்ளார்.

## கொரோனா வைரஸ் தொற்று நீண்ட காலம் நீடிக்க வாய்ப்பு

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொரோனா வைரஸ் தொற்று நீண்ட காலத்திற்கு நீடித்து இருக்க வாய்ப்பு உள்ளதாக, உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

பெருந்தொற்று பாதிப்பு தொடர்பாக மதிப்பிட, அந்த அமைப்பின் அவசரகால நிர்வாகக்குழு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதைதொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கொரோனா பெருந்தொற்று நீண்ட காலத்திற்கு நீடித்து இருக்க வாய்ப்பு உள்ளதாகவும், உயிரிழப்புகளின் தாக்கம், நாடுகள் மீது சமூக - பொருளாதார அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தொற்று தொடர்பாக இதுவரை அறியப்படாத ஆபத்துக்கள் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து வருவதோடு, நோய்த்தொற்று பரவல், வைரஸின் சாத்தியமான பிறழ்வுகள், நோய் எதிர்ப்புச் சக்தி ஆகியவை தொடர்பாக கூடுதலாக அறிய முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## 30 வினாடிகளில் கொரோனாவை கண்டறியும் 4 தொழில்நுட்பங்கள்

### இஸ்ரேல் கண்டுபிடிப்புக்கள் டெல்லியில் பரிசோதனை



30 வினாடிகளில் கொரோனாத் தொற்றைக் கண்டுபிடிக்கும் வகையில் இஸ்ரேல் விஞ்ஞானிகள் உருவாக்கிய 4 தொழில்நுட்பங்கள் தொடர்பில் டெல்லியில் பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

இஸ்ரேலை சேர்ந்த விஞ்ஞானிகள், டெராஹெர்ட்ஸ் ஸ்பெக்ட்ரோஸ்காப்பி (terahertz spectroscopy) தொழில்நுட்பம், ஐசோதெர்மல் டெஸ்ட் (isothermal test), பாலி அமினோ ஆசிட்ஸ் முறை (poly amino acids) , பேச்சு அடிப்படையிலான பரிசோதனை ஆகிய 4 தொழில்நுட்பங்களை கண்டுபிடித்துள்ளனர்.

அந்த 4 தொழில்நுட்பங்களும், டெல்லியில் உள்ள டாக்டர் ராம் மனோகர் லோஹியா மருத்துவமனையில் பரிசோதனை நடத்தப்பட இருப்பதாக பிரதமரின் முதன்மை அறிவியல் ஆலோசகர் விஜய் ராகவன் தெரிவித்துள்ளார்.

வழக்கமான பரிசோதனை போல இல்லாமல், ப்ரீதலைசர் (breathalyser) போன்ற கருவி முன் ஊதினாலோ அல்லது பேசினாலோ மாதிரியை சேகரித்து கொண்டு பரிசோதிக்கும் வகையிலான தொழில்நுட்பம் இவை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் தேர்தல் விதி மீறல்கள்; இதுவரையில் 269 முறைப்பாடுகள் பதிவு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, ஓக.03

பொதுத் தேர்தல் 2020 நடைபெறுவதற்கு இன்னும் 02 தினங்களே உள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்டமை மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகத்திற்கு இதுவரை 269 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றில் சட்டவிரோத பதாதைகள், சுவரொட்டிகள் தொடர்பாக 98 முறைப்பாடுகளும், அரச ஊழியர்கள் அரசியலில் ஈடுபட்டமை தொடர்பாக 30 முறைப்பாடுகளும், அன்பளிப்பு வழங்கல் தொடர்பாக 42 முறைப்பாடுகளும், கூட்டம் மற்றும் ஊர்வலங்கள் தொடர்பாக 52 முறைப்பாடுகளும், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக 10 முறைப்பாடுகளும், நியமனங்கள் மற்றும் இடமாற்றம் தொடர்பாக 3 முறைப்பாடுகளும், சொல் அச்சுறுத்தல் செய்தமை தொடர்பாக 3, இலத்திரனியல் ஊடக துஷ்பிரயோகம் தொடர்பாக 2 முறைப்பாடுகளும், சமூக ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்கள் தொடர்பாக 4 முறைப்பாடுகளும், வலிந்து தாக்குதல், கும்பலாகத் தாக்குதல் தொடர்பில் 6 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் பொய்ப்பிரச்சாரம் செய்தமை தொடர்பில் 2 முறைப்பாடுகளும், அஞ்சல் வாக்கு தொடர்பாக 1 முறைப்பாடும், சட்டவிரோத நிகழ்வு ஏற்பாடு செய்தமை தொடர்பில் 2 முறைப்பாடுகளும், வாக்காளர் உபசரிப்பு தொடர்பில் 1 முறைப்பாடும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் தொடர்பில் 3 முறைப்பாடுகளும், சொத்துக்களுக்கு சேதமிழைத்தல் தொடர்பில் 2 முறைப்பாடுகளும், மதத்தலைவர்கள் ஊடாக பிரசாரம் செய்தல் தொடர்பில் 5 முறைப்பாடுகளும், தீ வைப்பு, எரியூட்டல் போன்றவை தொடர்பாக ஒரு முறைப்பாடும், பொது வானவற்றில் 2 முறைப்பாடுகளுமாக 269 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்முறைப்பாடுகளில் தேர்தல் சட்டவிதி மீறல் தொடர்பாக 257 முறைப்பாடுகளும், தேர்தல் வன்செயல்கள் தொடர்பில் 12 முறைப்பாடுகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 172 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை முடிவுறுத்தப்பட்டுள்ளன எனவும், ஏனைய 97 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் மாவட்டத் தெரிவித்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான திருமதி. கலாமதி பத்மராஜா மாவட்ட அரச ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

# கரடியனாறு காட்டில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு – கரடியனாறு காட்டுபகுதியில் 28 வயது இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள கரடியனாறு பொலிஸ் பிரிவின் மரப்பாலம் பிரதேசம் அடர்ந்த மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) கண்டெடுக்கப்பட்ட சடலம் வடிச்சல் வீதி கித்துள் கிராமத்தைச் சேர்ந்த செல்வராசா ரவீந்திரன் என்பவருடையது என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:–

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் இந்த இளைஞனின் தாய் மாரடைப்புக் காரணமாக மரணித்துள்ளார்.

தாயின் பிரிவால் துயரம் தாளாது துவண்டு போயிருந்த இளைஞன் கடந்த 21ஆம் திகதி தாயின் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றிய சந்தர்ப்பத்தில் உன் பாசத்தை இழந்து தனித்திருக்க நான் விரும்பவில்லை. நானும் உன் பின்னால் வருவேனம்மா எனக் குறிப்பிட்டுள்ளார்.

தாயின் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றிய இளைஞன் அதன் பின்னர் வீட்டிலிருந்து மோட்டார் சைக்களில் வெளியேறிச் சென்றுள்ளார். எங்காவது தொழிலுக்குச் சென்றிருப்பார், தொழில் செய்து முடிந்து வந்து சேர்வார் என உறவினர்கள் எதிர்பார்த்திருந்த நிலையிலேயே நேற்று சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மாலை கித்துள் காட்டுப்பகுதிக்குச் சென்ற உறவினர்களில் ஒருவர் இந்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் காட்டிற்குள் கிடப்பதை அவதானித்து அதனருகே சென்ற போது அவ்விடத்தில் இளைஞனின் சடலமும் அவ்விளைஞன் பாவித்த செருப்பு, தலைக்கவசம் என்பனவும் காணப்பட்டுள்ளன. உடனடியாக இவ்விடயம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதின் பேரில் அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை உடற்கூறாய்வுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# கொரோனாத் தொற்றுத் தாயின் பெண் சிசுவுக்குத் தொற்றில்லை

## அறுவை சிகிச்சை மூலம் கொழும்பில் சுகப்பிரசவம்

கொரோனா தொற்றுக்குள்ளாகிய பெண்ணுக்குப் பிறந்த குழந்தைக்கு தொற்று இல்லை என்று கொழும்பு கிழக்கு வைத்தியசாலை மருத்துவர் பிரியந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

டுபாயில் இருந்து நாடு திரும்பிய கர்ப்பிணிப் பெண், கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமில் இருந்த நிலையில், கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது. கடந்த 21ஆம் திகதி இவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து. கொழும்பு கிழக்கு வைத்தியசாலையின் சிறப்பு பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

குறித்த பெண்ணுக்கு, மருத்துவர்கள், மற்றும் தொற்றுநோய் நிபுணர்கள் உள்ளிட்ட 35 பேர் கொண்ட மருத்துவக் குழுவினால், அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது தாயும், குழந்தையும் நலமுடன் இருப்பதாகவும், குழந்தைக்கு தொற்று இல்லை என்றும் முடிவு வந்திருப்பதாகவும் மருத்துவர் பிரியந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# முதல் தடவையாக இம்முறையே ‘காட்போட்’ வாக்குப்பெட்டிகள்



நாளை மறுதினம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை வரலாற்றில் நடைபெறாத விடயங்களை நடத்த வைப்பதாக உள்ளது.

இத்தனை காலமும் இடம்பெற்ற தேர்தல்களில் மரப்பலகையினாலான வாக்குபெட்டிகளே பயன்படுத்தப்பட்டது. தேர்தல்கள் வரலாற்றில் முதற் தடவையாக ‘காட்போட்’ மட்டையிலான வாக்குப்பெட்டிகள் இத்தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளன.

நன்குகனதியானகாப்போட் மட்டைகளைக் கொண்ட வாக்குப் பெட்டிகள் கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரியில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களால் தயார் செய்யப்பட்டன. இவ்வாறு தயார் செய்யப்பட்ட பெட்டிகள் நாடளாவிய ரீதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

# இலங்கையின் தலைவிதி புதன்கிழமை நிர்ணயம்!

## 225 ஆசனங்களுக்கு 7,452 பேர் களத்தில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

கொழும்பு, ஓக.03

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் பரபரப்புக்கு மத்தியில் எதிர்வரும் 05 ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 03 ஆயிரத்து 682 பேரும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 03 ஆயிரத்து 800 பேருமாக மொத்தம் 07 ஆயிரத்து 452 பேர் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 874 பேர் வாக்களிப்பதற்கு தகுதிப்பெற்றுள்ளனர். பொதுத் தேர்தலுக்கான 12 ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் நாடு முழுவதும் 71 வாக்கெண்ணும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 05 மாதங்களின் பின்னர் பொதுத் தேர்தல் நடைபெறுவது இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக மாறியுள்ளன. வழமையாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 10 முதல் 14 நாள்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்பட வேண்டும் என்பதுடன், வேட்புமனுக்கள் கோரப்பட்டு ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த மார்ச் முதலாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த போதிலும் திடீரென நாட்டில் கொரோனா வைரஸ் பரவலுக்கு முகங்கொடுக்க நேரிட்டதால் ஐந்து மாதங்களின் பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்ற நாளாக ஆகஸ்ட் 05 ஆம் திகதி மாறியுள்ளது. அன்றைய தினம் வாக்களிப்பு முடிவடைந்ததும் மறுநாள் 06 ஆம் திகதி காலை 8 மணி முதலே வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும். முதலாவது தேர்தல் முடிவு மாலை 06 மணியளவில் அறிவிக்க முடியுமென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அன்று நள்ளிரவுக்குள் ஆளப்போவது யாரென்பது தெரியவரும். வேட்பாளர்கள் பெற்றுக்கொள்ளும் விருப்பு வாக்குகள் 07ஆம் திகதியே வெளியிடப்படவுள்ளன.

அடுத்தவார இறுதியில் புதிய அமைச்சரவையும் பதவியேற்கும் எனத் தெரியவருவதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் வர்த்தமானி வெளியானதும் 20ஆம் திகதிக்கு முன்னர் 09ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்கான அதிவிசேட வர்த்தமானியையும் ஜனாதிபதி வெளியிடுவார் எனவும் அறியமுடிகின்றது.

கபே, பவ்ரல் உட்பட பல உள்நாட்டு, சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்களும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

பொதுத் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்துள்ளன. பிரதான அரசியல் கட்சிகள் யாவும் நேற்று இறுதிக்கட்ட பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டன. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியின்கீழ் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுஜன முன்னணியின் ஸ்தாபர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் மும்முனைகளில் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தனர். பொதுஜன முன்னணியின் நேற்றைய இறுதிப் பரப்புரைக் கூட்டங்கள் அம்பாந்தோட்டை, கொழும்பு, குருநாகல் மாவட்டங்களை மையப்படுத்தி நடைபெற்றன.

மறுபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியும் இறுதிக்கட்ட பரப்புரையில் தீவிரமாக ஈடுபட்டனர். வடக்கு, கிழக்கு, மலையக, தென் பகுதியென அனைத்துப் பிரதேசங்களிலும் பரப்புரைக் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்த அவர், நேற்று கொழும்பில் இறுதிப் பரப்புரைக் கூட்டத்திலும் கலந்துகொண்டார். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதிப் பரப்புரைக் கூட்டமும் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மத்திய கொழும்பில் நேற்று நடைபெற்றது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட இதர கட்சிகளும் வெற்றி இலக்கை அடைவதற்காக இறுதிக்கட்டப் பரப்புரைகளில் நேற்று ஈடுபட்டன.

# வாக்களிப்புத் தொடர்பான புதிர்களும் பதில்களும்



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்
சமூகவியல் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.

கொரோனாவின்கைப்பிடிக்குள் மாட்டிக்கொண்ட நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? நடைபெறாதா? என்ற இழுபறிக்கு மத்தியில் சரியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை அது நடைபெறப்போகின்றது.

இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் சற்று வித்தியாசமானதான் அமைவதனால் பல கேள்விக்கு மத்தியில் வாக்காளர்களும், வேட்பாளர்களும் காணப்படுகின்றனர். அவர்களின் கேள்விகளுக்கு பதிலைக் கொடுக்கும் விதத்தில் தான் இக்கட்டுரை அமைகின்றது.

**நடைபெறப்போகின்ற தேர்தலில் ஏன் வாக்களிக்க வேண்டும்?**

ஒவ்வொரு நாட்டு குடிமக்களுக்கும் இருக்கின்ற மிகப்பெரிய கடமை வாக்களிப்பதாகும். இந்த ஜனநாயக உரிமையினை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு குடிமகனும் வாக்களிக்க வேண்டும். அதுமட்டுமில்லாது வாக்காளன் அளிக்கும் வாக்கே அவனுடைய எதிர்காலத்தை தீர்மானிப்பதாய் அமைவதால் கட்டாயம் தனது வாக்கு உரிமையை அவன் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்கும்சந்தர்ப்பத்தில்தான்வாக்காளர்கள் மிக அவதானத்துடனும், தெளிவுடனும் நடந்து கொள்வது அவசியமாகும். வாக்காளனின் வாக்கே வாக்காளரைக் காப்பாற்றும் என்பதை சிந்தனையில் கொள்ள வேண்டும். வேட்பாளர்களின் வாக்குறுதிகள் உங்களைக் காக்காது. குறிப்பிட்ட வேட்பாளரைத் தெரிவு செய்து அதிகாரத்தை கையளிப்பதற்கு முன்னர் அவரின் உண்மைத் தன்மை பற்றியும், அவருடைய தகுதி நிலை பற்றியும் ஆழமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ஜனநாயகம் என்பது வாக்காளர்களின் சுதந்திரத்திலும், சுதந்திரம் என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும் தங்கியுள்ளன. அரசியல் வாதிகள் காலத்திற்குக் காலம், கட்சி மாறலாம், கொள்கையை மாற்றலாம், தடம் மாறலாம். ஆனால் வாக்காளர்கள் எப்போதும், எவ்வேளையும் தடம்



மாறவோ, குழப்பமடையவோ கூடாது. சரி யானவருக்கு உங்கள் வாக்கை அளிப்பதன் மூலம் போலிகளைப் புறந்தள்ளி விட்டு, ஆரோக்கியமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு கட்டாயம் வாக்களித்தே ஆகவேண்டும்.

**நடைபெறப் போகின்றத் தேர்தலில் தொற்றிற்கு அச்சமின்றி வாக்களிக்க முடியுமா?**

புதன்கிழமை (05.08.2020) நடை பெறப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் எந்தவிதமான பயமும், அச்சமுமின்றி வாக்களிக்க கூடிய அனைத்து விதமான ஏற்பாடுகளையும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முன் னெடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். தொற்று பரவலுக்கு மத்தியில் நாம் வீட்டிற்குள்ளேயே இருக்கின்றோமா? நிச்சயமாக இல்லை என்றுதான் கூறவேண்டும். சந்தைக்குச்செல்கின்றோம், நலம்விசாரிக்க உறவினர்களிடம் செல்கின்றோம், சுப மற்றும் துக்கம் விசாரிக்கச் செல்கின்றோம். மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏனைய பல இடங்களுக்குச் செல்கின்றோம். இதே போன்று வாக்களிப்பதற்கும் செல்ல வேண்டும். எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற பொறுப்பினை நாம் யாவரும் நிறைறேற்ற வேண்டும். தொற்றுப் பரவலுக்கு எந்தவிதமான சாத்தியமும் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் எவ்வா றான ஏற்பாடுகள் முன்னடுக்கப்பட் டுள்ளன?**

மூன்று முறை தொற்று நீக்கல் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. கொரோனாத் தொற்று பரவுவதற்கான வாய்ப்பு வாக்களிப்பு நிலையத்தில் இடம் பெறாது என்பதை வாக்காளர் ஒவ்வொருவரும் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கச் செல்கின்ற வாக்காளர் மூன்று தடவை தொற்று நீக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றார். முதலாவது வாக்களிப்பதற்கு நிலையத்திற்கு செல்கின்ற நுழைவாயிலில் கிருமித் தொற்று நீக்கப்பட்ட பின்னர் தான் உள்ளே அனுமதிக்கப் படுகின்றார். சரியான ஒரு மீற்றர் இடைவெளிப் பேணப்பட்டு வரிசையில் நின்று வாக்களிப்பு அறைக்குள் செல்லுகின்ற சந்தர்ப்பத்திலும் அவரு டைய கைகள் தொற்று நீக்கலுக்கு இரண்டாவது தடவையும் உட்படுத்தப் படுகின்றது, இவ்வாறு வாக்களிப்பு அறைக்குள் அனுமதிக் கப்பட்டவர் தனது ஆள் அடையாள அட்டையினை உறுதிப் படுத்திக் கொள் வதற்கு உரிய அதிகாரிகள் மட்டும் தனது முகக்கவசத்தை அகற்றிக் காட்ட வேண்டும்.

> *வாக்காளனின் வாக்கே வாக்காளரைக் காப்பாற்றும் என்பதை சிந்தனையில் கொள்ள வேண்டும். வேட்பாளர்களின் வாக்குறுதிகள் உங்களைக் காக்காது. குறிப்பிட்ட வேட்பாளரைத் தெரிவு செய்து அதிகாரத்தை கையளிப்பதற்கு முன்னர் அவரின் உண்மைத் தன்மை பற்றியும், அவரு டைய தகுதி நிலை பற்றியும் ஆழமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ஜனநாயகம் என்பது வாக்கா ளர்களின் சுதந்திரத்திலும், சுதந்திரம் என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும் தங்கியுள்ளன.*

உரிய அதிகாரி பரீட்சித்த பின்னர், கையில் மை பூசுகின்ற செயற்பாடும் முறையான சுகாதார நடை முறையைப் பின்பற்றி செய்யப்படுகின்றது. எப்படியெனில் கடந்த கால தேர்தல்களில் பேனையினாலே மை பூசப் பட்டது. ஆனால் இம்முறை ஒவ்வொருவாக்காளருக்கும் தனித்தனி மை பூசப்படும் குச்சி பயன்படுத்தப்படவுள்ளது. ஒரு வாக்காளருக்கு கையில் மை பூசப்பட்ட குச்சி இன்னொருவருக்குப் பாவிக் கப்படாமல் குப்பைத் தொட்டியில் வீசப்படுகின்றது, இவ் வாறு மை பூசுகின்ற செயற் பாடும் இம்முறை சற்று வித் தியாசமாக அமைகின்றது. வாக்காளர் கைவிரலை நீட் டிக் கொடுக்க வேண்டும்.இவ்வாறு மை பூசுமட்டும் கையை நீட்டி வைத்துக் கொள்வதற்கு சிரமமாக இருப்பவர்கள் அவர்களுக்கு அருகில் ரிசு வைக்கப்பட் டிருக்கும். வாக்காளர் அந்த ரிசுவினை தானே தனது கையால் எடுத்து மேசையின் மேல் வைத்து அதன் மேல் தனது கையை வைத்து மை பூச கொடுக்க வேண்டும். அவ் வாறு மை பூசியவுடன் வாக்காளரே அந்த ரிசுவினை எடுத்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும். அதன் பின்னர் வாக்குச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு, தான் கொண்டு சென்ற கறுப்பு அல்லது நீலப் பேனையினால் (பேனை கொண்டு செல்லத் தவறிய வர்களுக்கு தொற்று நீக்கிய பேனை வழங் கப்படும்) வாக்கினை அளித்து விட்டு உரிய வாக்கு பெட்டியில் போட்ட பின்னர் அவர் கைகள் மூன்றாவது முறையாகவும் கிருமி தொற்று நீக்கல் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின் றது. இவ்வாறு மிகவும் சிறந்த பாதுகாப்பான மற்றும் சுகாதார நடை முறைகள் வாக்களிப்பு நிலையத்தில் கடைப்பிடிக்கப்படுவதால் வாக்காளர் எந்தவிதமான அச்சமும் இன்றி தனது அடிப் படை உரிமையான வாக்களிக்கும் உரிமையினை பயன்படுத்த வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

**வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும் போது எவ்வாறான நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும்?**

வழமையாக நடைபெறுகின்ற தேர்தலில் வாக்களிப்பதற்கு உத்தி யோகப்பூர்வ வாக்காளர் அட்டை மற்றும் அடையாள அட்டையினை கொண்டு செல்வதே வழமை. ஆனால் இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் நடைமுறை சற்று வித்தியாசப்படுகின்றது. காரணம் கொரோனாத் தொற்று. இம்முறை வாக்களிப்பதற்குச் செல்லும் போது உத்தியாகப் பூர்வ வாக்காளர் அட்டை, அடையாள அட்டை, கறுப்பு அல்லது நீல நிற பேனை ஒன்று, முகக்கவசம் கட்டாயம் அணிந்து செல்ல வேண்டும், வாக்களிப்பு நிலையத்தில் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணல், தேவையற்ற பொருள்கள் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும், வாக்களித்த பின்னர் உடனடியாக வாக்க ளிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறல். இவ்வா றான நடைமுறையினை வாக்காளர் கட்டாயம் பின் பற்ற வேண்டும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# வாக்களிப்புத் தொடர்பான....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, வாகன அனுமதி அட்டை, அரச ஓய்வூதிய அட்டை, முதியோர் அட்டை, மதகுருமாருக்கான அடையாள அட்டை, கிராம அலுவலரினால் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை ஆகிய ஏழு அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை மட்டும் எடுத்துச் சென்றால் போதுமானது. மேலும் கொரோனா அறிகுறிகளான காய்ச்சல், இருமல், தொண்டைவலி மற்றும்சுவாசஇடர்பாடுகள்என்பனதென்படுபவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு பி.ப 4 மணி முதல் 5 மணி வரையான காலப்பகுதிக்குள் வாக்களிப்பதற்குச் செல்வது சிறப்பானதாக அமையும்.

## வாக்குச் சீட்டினை எவ்வாறு பயன்படுத்துவது?

வாக்காளர் தங்களுக்கு வழங்கப்படுகின்ற வாக்குச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு மறைவிடத்திற்குச் சென்ற பின்னர் முதலாவது செய்ய வேண்டியது, தான் விரும்பும் அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிராக இருக்கும் வெற்றுப் பெட்டிக்குள் புள்ளடியினை (ஓ) இட வேண்டும். அதன்பின்னர் வாக்குச் சீட்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேடச்சைக் குழுவினால் பெயர் குறிக்கப்பட்ட ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று வேட்பாளரின் விருப்பு இலக்கம் காணப்படும் கூட்டில் உள்ள இலக்கங்கள் மீது புள்ளடியினை (ஓ) இடுவதன் மூலம் தனது விருப்பு வாக்கினை அளிக்க முடியும். (மூன்று வேட்பாளரின் விருப்பு இலக்கங்களிற்கு மேல் வாக்கினை அளிக்க முடியாது) தனது விருப்பு வாக்கினை மூன்று வேட்பாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஒருவருக்கு கூட விருப்பு வாக்கினை அளிக்கலாம். அல்லது கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவிற்கு மட்டும் வாக்கினை அளித்து விட்டு விருப்பு இலக்கங்களுக்குத் தனது வாக்கினை அளிக்காவிட்டாலும் அந்த வாக்குச் சீட்டு செல்லுபடியானதாகக் கருதப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இவை தவிர வாக்குச்சீட்டில் ஏனைய வேறு வழிமுறைகளில் வாக்களிக்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது.

## தனிமைப்படுத்தப்பட்டோருக்கு ஏன் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை?

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வருந்தக்கூடிய ஒரு விடயம் கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகளில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பவர்களுக்கும், தனிமைப்படுத்தும் நிலையங்களில் உள்ளோருக்கும் வாக்களிக்கின்ற உரிமை வழங்கப்படாமையே. இதற்கான காரணத்தினைப் பொதுமக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். இவர்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்குவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. ஏன் அனைவரும் கேட்ட கேள்வி அவர்களுக்கு நடமாடும் வாக்களிப்பு நிலையங்களினை ஏற்பாடு செய்து அதன் மூலம் வாக்களிக்க முடியும் என்பதுதான். இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். இருந்தாலும் பல சிக்கல்கள் உள்ளன. தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தால் எந்தவித குழப்பமும் ஏற்படாது. அவர்களுக்கு நடமாடும் வாக்களிப்பு நிலையத்தினை செய்திருக்கலாம். ஆனால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட அனைவரும் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவும், வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுவதால் இவர்கள் வாக்களித்தால் அந்த வாக்கினை மாவட்ட மற்றும் பிரதேச ரீதியானதாக வேறுபடுத்திக் கணக்கெடுப்பதில் பல சிக்கல்கள் உள்ளமையே ஆகும். இவற்றிற்கு மேலதிகமாக வாக்களிப்பு நடவடிக்கை சாதாரண வாக்களிப்பு நிலையம் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான வாக்களிப்பு நிலையங்களில் மட்டும்தான் நடைபெற வேண்டும். இவற்றிற்கு மேலதிகமாக வேறு இடங்களில் இட்பெற மாட்டாது. ஆனால் சாதாரண வாக்காளர்களைப்போல வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டவர்கள் தேர்தல் தினத்தன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணிவரை வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தங்களது வாக்கினை அளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு முடிவடைந்து மறுநாள் வாக்கு எண்ணும் நடவடிக்கை தொடங்கப்படும் மட்டும் வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக இருக்குமா?

ஆம்.நிச்சயமாக பாதுகாப்பாக இருக்கும். இதுவரையான காலங்களில் வாக்களிக்கும் செயற்பாடு நிறைவுற்றதும் இரவு 8 மணியளவில் வாக்கெண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். இதுதான் வழமை. ஆனால் இம்முறை கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களுக்குப் பிறகுதான் வாக்கெண்ணும் அரச அலுவலர்களிடம் வாக்குப்பெட்டிகள் ஒப்படைக்கப்படவுள்ளன. இதுவரை வாக்குப்பெட்டிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இம்முறை வாக்குப்பெட்டிகள் சாதாரண கார்ட்போர்ட் அட்டையால்தான் தயாரிக்கப்பட்டுள்ளன. வாக்கெடுப்பு நிறைவுற்றதும் இங்கிருந்து வாக்குப்பெட்டிகள் சீல் செய்யப்பட்டு, பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் வாக்கெண்ணும் நிலையத்திற்கு கொண்டு வரப்படும். இதன்பின்னர் கொண்டுவரும் வாக்குப் பெட்டிகள் மற்றுமோர் பெரிய கார்ட்போர்ட் பெட்டியில் வைத்து அது மூடப்பட்டு அந்தப் பெட்டி சீல் செய்யப்படும்.

உதாரணமாக வாக்களிப்பு நிலையத்தில் இருந்து 5 வாக்குப்பெட்டிகள் கொண்டு வரப்படும் போது இந்த 5 பெட்டிகளும் ஒரு பெரிய பெட்டியில் வைத்து சீல் செய்யப்படும். இதனைத் தொடர்ந்து மொத்தமாக சீல் செய்யப்பட்ட வாக்குப்பெட்டிகள் மேசை ஒன்றின் மீது வைத்து, வாக்குப் பெட்டிவைக்கப்படும் அறை முற்றாகப் பூட்டப்பட்டு சீல் செய்யப்படும். இவ்வாறு வாக்கெண்ணும் முழு வளாகமும் பொலீஸ், தேர்தல் கண்ணாணிப்பு அமைப்பின் உறுப்பினர்களாலும் மற்றும் கட்சி மற்றும், சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் ஊடாக பாதுகாக்கப்படும். ஆகவே வாக்குப்பெட்டிப் பாதுகாப்பில் வேட்பாளர்களும், பொது மக்களும் எந்தவிதமான அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

## மூன்று கட்ட வாக்கெண்ணும் பணி என்றால் என்ன?

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணும் பணிகள் மூன்று கட்டமாக இடம்பெறுகின்றது. எண்ணப்பட்ட வாக்குகள் மீண்டும் மீண்டும் மூன்று தடவை பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது என்று சில நேரங்களில் நாம் நினைக்கக்கூடும். அதுதான் தவறு. முதல்கட்ட வாக்கெண்ணும் பணி என்பது வாக்களிப்பு நிலையங்களில் வாக்குச் சீட்டு கொடுப்பவர் எத்தனை வாக்குச் சீட்டுகள் கொடுக்கப்பட்டது, எத்தனை வாக்காளர்கள் வாக்களிக்க ளிப்பதற்கு வந்தார்கள் என்பதனை கணக்கெடுத்து வைத்துக் கொள்வார். அவ்வாறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர்களிடம் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் வாக்குப்பெட்டிகளுக்குள் இருக்கின்ற வாக்குச் சீட்டுகளுக்குச் சமனாக இருக்கின்றனவா? என்பதை எண்ணி, கணக்கெடுத்து, பரீட்சித்துப் பார்க்கும் செயற்பாடே முதல்கட்ட வாக்கெண்ணும் பணியாகும். இரண்டாம் பட்ட வாக்கெடுப்பு என்பது வாக்குப் பெட்டிகளில் உள்ள வாக்குச் சீட்டுக்களில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குள் எண்ணப்படும் பணியாகும்.

எந்தக்கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் எத்தனை வாக்குகளைப் பெற்றுள்ளன என்பதனைக் கணக்கெடுப்பது இரண்டாம் கட்ட வாக்கெண்ணும் நடவடிக்கை எனலாம். இந்தப் பணி முழுமையாக நிறைவுற்ற பின்னர் தான் மூன்றாம் கட்ட வாக்கெண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். இந்த வாக்கெண்ணும் பணியில் தான் விருப்பு வாக்குகள் எண்ணப்படும்.

விருப்பு வாக்கு என்பது குறித்த கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கணக்கெடுப்பதாகும். அதாவது வேட்பாளர்களின் விருப்பிலக்கங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கணக்கெடுப்பதாகும். மூன்று கட்ட வாக்கெண்ணும் பணியானது முழுமையாக நிறைவுற்ற பின்னர்தான் எந்தக்கட்சி அல்லது சுயேச்சைக்குழு அதிகூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது, அந்த கட்சியில் அல்லது சுயேச்சைக்குழுவில் போட்டியிட்ட வேட்பாளர்களில் யார் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என்பது பற்றி முடிவுகள் வெளியிடப்படும்.

> **அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, வாகன அனுமதி அட்டை, அரச ஓய்வூதிய அட்டை, முதியோர் அட்டை, மதகுருமாருக்கான அடையாள அட்டை, கிராம அலுவலரினால் வழங் கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை ஆகிய ஏழு அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை மட்டும் எடுத்துச் சென்றால் போதுமானது.**

(தொடரும்)

# திருமலை மாவட்டத்தில் காணிகள் இளைஞர், யுவதிகளுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பகிர்ந்தளிப்பு






**(அப்துல்சலாம் யாசீம்)**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு எதிர் கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 35 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டன.

தேசிய இளைஞர்சேவைகள்மன்றத்தின் பணிப்பாளர் நாயகமும், தலைவருமான திஸார ஜெயசிங்கவினால் இன்று இவை உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கும்புறுப்பிட்டி பகுதியில் 1984 ஆம் ஆண்டு இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு சொந்தமான 35 ஏக்கர் காணிகள் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக தனியார் சொந்தமாக்கப்பட்டு, கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டன எனவும், அவை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் இளைஞர் விவசாயம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டிற்காகவும் வழங்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

இக்காணியினூடாக சுற்றுலாத்துறை மற்றும் விவசாயத் துறையை மேம்படுத்துவதுடன் சர்வதேச இளைஞர் அபிவிருத்தி வலயம் ஒன்றை உருவாக்க உள்ளதாகவும், இதனூடாக பாரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தூர நோக்காகக் கொண்டு ஏற்படுத்த உள்ளதாகவும் பணிப்பாளர் நாயகமும் தலைவருமான திஸ்ர ஏக இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய மாற்றத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திஸார ஜெயசிங்க மற்றும் அவரின் பிரத்தியேக செயலாளர் பசிது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சிசிர குமார மற்றும் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சந்திரபால, நிர்வாகத்துறை பணிப்பாளர் சமல் மனுல, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்,யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## அங்கொட லொக்காவுக்கு போலி ஆவணங்கள் தயாரிக்க உதவிய மூன்று பேர் கோவையில் கைது

இலங்கையின் பாதாள குழு முக்கியஸ்தரான அங்கொட லொக்காவுக்கு போலியான ஆவணங்கள் தயாரிக்க உதவிய இலங்கை பெண் உட்பட மூவர் கோவையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் அங்கொட லொக்காவின் உடல் கோவையில் கண்டெடுக்கப்பட்டு, ஆரம்பகட்ட விசாரணைகளைத் தொடர்ந்து அவரது உடல் மதுரையில் தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே அங்கொட லொக்காவுடன் தங்கியிருந்தவர் எனக் கூறப்படும் இலங்கை பெண்ணான அமானி தாஞ்சி (வயது 27), மதுரையைச் சேர்ந்த சிவகாமி சுந்தரி (வயது36), திருப்பூரைச் சேர்ந்த எஸ்.தினேஸ்வரன் (வயது 32) ஆகிய மூவரும் இவ்வாறு போலியான ஆவணங்களைத் தயாரித்தமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவியல் சதி மற்றும் ஆவணங்களை மோசடி செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## விசேட பாதுகாப்பு நடவடிக்கை தேர்தலை ஒட்டித் தொடங்கியது

கொழும்பு, ஓக.03

தேர்தல் வாக்களிப்பு தினத்தினை அடிப்படையாகவைத்து இன்று முதல் விசேட பாதுகாப்பு திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் தேர்தல் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை நாட்டின் பல பகுதிகளில் விசேட பொலிஸ்சோதனை சாவடிகளை ஏற்படுத்தப்படவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குபெட்டிகளை கொண்டு செல்லும் நடவடிக்கையின்போது விசேடபொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## நல்லூரில் இன்று...





படங்கள்:- பிரபாகரன் டிலக்ஷன்

## வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்துகின்ற நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது

தேர்தல் விதியை மீறி இடம்பெற்றதாகக் கூறப்படும் வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்தும் நடவடிக்கை நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் திணைக்களம் நேற்று இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

கடந்த வாரம் முல்லைத்தீவுக்குச் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்த நடவடிக்கையை முன்னெடுத்தார். தேர்தல் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்றபோதிலும், வாக்குகளை கவர்வதற்காக இத்தகைய செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று முறையிடப்பட்டது.

இதையடுத்தே இந்த திட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது. அத்துடன் தேர்தல் நிறைவடைந்த பின்னர் இந்தப் பணியை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இதன்போது அங்கு திரண்ட ஈ.பி.டி.பியினர் மக்களை திரட்டி போராட்டம் நடத்தவும் முயற்சித்தனர். எனினும் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் கூறிய பின்னர் மக்கள் கலைந்து சென்றனர் .

## நாளை முதல் பாடசாலைகளுக்கு தேர்தலை ஒட்டி விசேட விடுமுறை

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நாளை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலினை முன்னிட்டு இவ்வாறு அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுவதாக கல்வியமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது எதிர்வரும் 4, 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 27ஆம் திகதி நாடளாவிய ரீதியிலுள்ள தரம் 11, 12 மற்றும் 13ஆம் தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் ஏனைய தரங்களுக்கான கல்வி நடவடிக்கை ஓகஸ்ட் 10 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்போது சுகாதார வழிகாட்டுதல்கள் அவசியமாக கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு கல்வி அமைச்சகம் அனைத்து அதிகாரிகளுக்கும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று நெருக்கடியுள்ள இராஜாங்கனை மற்றும் வெலிகந்த கல்வி வலையங்களுக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதிக்கு முன்னர் திறக்கப்படாது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2020 இல் வெளியிடப்பெற்றது.